17

# எளிமையாக வாழ்வோம்

- நீ எவ்வாறெல்லாம் சம்பாதித்தாய்?
- நீ எதற்கெல்லாம் செலவளித்தாய்?



மறுமையில் ஒவ்வொரு மனிதனும் விடையளிக்க வேண்டிய வினாக்கள் இரண்டை மேலே காண்கிறீர்கள். நல்ல வழிகளில் சம்பாதிப்பது எத்துணை அவசியமோ அவ்வாறே நல்ல முறையில் செலவளிப்பதும் அவசியமாகும் என்பதை இதன் மூலம் புரிந்து கொள்கிறோம்.

தனிமனிதனின் அல்லது சமூகத்தின் அல்லது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உற்பத்திகளை அதிகரிப்பது அவசியமாகும். உற்பத்தி எவ்வளவு தான் அதிகரித்தாலும் செலவினங்கள் ஒழுங்குபடுத்தப்படாத நிலையில் அது எந்தப் பயனையும் ஏற்படுத்தப் போவதில்லை. எனவே தான் இஸ்லாம் செலவினங்களை ஒழுங்குபடுத்த வழிகாட்டியுள்ளது.

இங்கு செலவினங்களை ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கான சில வழிமுறைகளைக் கவனிப்போம்.

## எளிமை

வசதியிருந்தும் கூட ஆடம்பரத்தை தவிர்த்துக் கொள்வதே எளிமையாகும்.

நபி ﷺ அவர்களின் வாழ்வு பற்றி குறிப்பிடும் அன்னை ஆயிஷா (ரழி), ''நபி ﷺ அவர்கள் தொடர்ந்து மூன்று நாட்கள் வயிறார உண்ணவில்லை. நாங்கள் விரும்பியிருந்தால் வயிறார உண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் தம்மை விட அடுத்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கினார்கள்'' என குறிப்பிடுகின்றார் (பைஹகீ).

நபி ﷺ அவர்கள் பயன்படுத்திய தலையணை, பாய், ஆடைகள் என்பன அவர்களது எளிமையான வாழ்வுக்கு சான்றாக உள்ளன.

நபி ﷺ அவர்களது இப்போக்கை பின்னர் வந்த குலபாஉர் ராஷிதூன்களிடமும் அவதானிக்க முடிகின்றது.

- உமர் (ரழி) அவர்கள் கலீபாவாக இருக்கும்போதும் அவரது ஆடையில், புயங்களுக் கிடையில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக மூன்று ஒட்டுக்கள் போடப்பட்டிருப்பதை நான் கண்டேன் என அனஸ் (ரழி) கூறுகின்றார் (அத்தர்கீப் வத்தர்ஹீப்).
- ஜுமுஆ தினத்தில் உஸ்மான் (ரழி) அவர்களை மிம்பரில் நான் கண்டேன். அவர்கள் அணிந்திருந்த ஆடையின் பெறுமதி நான்கு அல்லது ஐந்து திர்ஹம்தான் இருக்கும்' என அப்துல்லாஹ் (ரழி) கூறுகின்றார் (தபரானி).

நபி ﷺ அவர்களோ, கலீபாக்களோ விரும்பியிருந்தால் மிக ஆடம்பரமாக வாழ்ந்திருக்க முடியும். அதற்குரிய அனைத்து வசதிகளும் அவர்களுக்குக் கிடைத்தன. ஆனால் அவற்றை அடுத்தவர்களுக்கு வழங்கிவிட்டு அந்த உத்தம மனிதர்கள் எளிமையாக வாழ்ந்தனர்.

## சிக்கனம்

உலோபித்தனத்துக்கும் வீண்விரயத்துக்கும் இடைப்பட்ட நிலையே சிக்கனம் எனப்படுகின்றது. இது ஸூரா ஃபுர்கானில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லாஹ்வின் அடியார்களது சிறப்புப் பண்புகளில் ஒன்றாகும்.

''மேலும் அவர்கள் செலவு செய்யும்போது வீண்விரயமும் கஞ்சத்தனமும் செய்வதில்லை. மாறாக அவர்களுடைய செலவுகள் இந்த மிதமிஞ்சிய இரு நிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும்'' (அல்குர்ஆன் 25:67).

சிக்கனமாக வாழ்வது வரவேற்கப்பட வேண்டியதாகும். இதனை பழக்கப்படுத்திக் கொள்ள கீழ்வரும் அம்சங்களைக் கவனத்தில் கொள்வோம்.

### 1. வீண்விரயம் செய்வதைத் தவிர்த்திடுவோம்.

''உறவினர்களுக்கும் வறியவர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் அவரவர்க்குரிய உரிமையை வழங்கிவிடுவீராக. ஆனால் வீண் செலவு செய்யாதீர்! வீண் செலவு செய்வோர் ஷைத்தானின் சகோதரர்களாவர். ஷைத்தானோ தன் இறைவனுக்கு மிகவும் நன்றி கெட்டவனாக இருக்கின்றான்'' (அல்குர்ஆன் 17:26-27).

வீண்விரயம் செய்வதனால் உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கு முரிய உரிமைகளை வழங்க முடியாது போகும். எனவேதான் உரிமையை வழங்குமாறு கட்டளையிட்ட பின் வீண்விரயம் தடுக்கப்பட்டுள்ளது.

ஆதலால், வீண்விரயம் கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

வீண்விரயம், ஓர் அநீதியாகும்.

எதையுமே வீண்விரயம் செய்யக் கூடாது.

''ஸஃத் இப்னு அபீவக்காஸ் (ரழி) வுழூ செய்து கொண்டிருந்தார். அவ்வழியே வந்த நபி (ஸல்) அவர்கள், 'வீண்விரயம் செய்யாதீர்' என்றார்கள். அல்லாஹ்வின் தூதரே! நீரில் வீண்விரயம் என்பது உண்டா? என ஸஃத் வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஆம், நீங்கள் ஓடுகின்ற ஒரு நதியின் அருகே இருப்பினும் சரி வீண்விரயம் உண்டு' என்றார்கள்'' (இப்னு மாஜா).

கீழ்க் காணும் அம்சங்களும் வீண்விரயத்தில் அடங்கும்

- மிருகங்களை பசியினாலும், நோயினாலும் சாகவிடுவது.
- பயிர்களை நோயினால் அழியவிடுவது.
- தானியங்களை, பழங்களை, உணவுப் பொருட்களை பயன்படுத்தாது அழுகி, அழியவிடுவது.
- ஆடைகளைப் பயன்படுத்தாது வெறுமனே இற்றுப் போகவிடுவது.
- கட்டடங்களைப் பழுதுபார்க்காது காலத்தால் அழியவிடுவது.
- தேவையின்றி விளக்குகளை எரிய விடுவது.
- நீர்க் குழாய்களை தேவையின்றி திறந்து விட்டிருப்பது.
- மேலதிகமாக உணவைத் தயாரிப்பதும் தயாரிக்கப்பட்ட உணவைக் குப்பைத் தொட்டியில் கொட்டுவது.
- ஆடையில் ஒரு சிறிய கிழிசல் காணப்படுகிறது என்பதற்காக அதனை எறிந்து விடுவது.
- நேரத்தை வீணடிப்பது.

வீண்விரயம் எதுவாக இருந்தாலும் அதனை விட்டு விலகியிருப்பதே முஃமினின் பண்பாகும்.

## 2. ஆடம்பரத்தைத் தவிர்ப்போம்

''யார் வெள்ளிப் பாத்திரத்தில் சாப்பிடுகின்றாரோ அல்லது அருந்துகின்றாரோ நிச்சயமாக அவரது வயிற்றில் நரக நெருப்பின் சப்தமே கேட்கின்றது'' (புஹாரி, முஸ்லிம்).

''யார் அழகிய (ஆடம்பரமான) ஆடையை அணியும் ஆற்றல் இருந்தும் பணிவுக்காக அதனைத் தவிர்ந்தால் அல்லாஹ் மறுமை நாளில் அவனுக்கு கண்ணியமான உயர்தர ஆடையை அணிவிப்பான்'' (பைஹகி).

ஆடம்பரத்தைத் தவிர்ப்பதானது,

- பிறரிடம் கையேந்தாது வாழ்வதற்கு ஒரு வழியாகும்.
- கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கு ஒரு வழியாகும்.
- எம்மிடம் உள்ள சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஒரு வழியாகும்.

எனவே ஆடம்பரத்தைத் தவிர்த்து, சிக்கனத்தைக் கைக்கொள்வோம்.

''சிக்கனமாக இருப்பவன் வறுமைக்குள்ளாக மாட்டான்'' (தபரானி)

## சேமிப்பு

ஒரு மு.்.மினின் வாழ்வு ஒழுங்கற்ற, திட்டமிடப்படாத வாழ்வாக அமையாது. மாறாக தனதும் தனது சந்ததியினரதும் எதிர்காலம் பற்றிச் சிந்தித்துத் திட்டமிட்டு வாழ்கின்ற வாழ்வாகவே அமையும். அதில் எதிர்காலத்துக்கான சேமிப்பும் இருக்கும்.

எறும்பு போன்ற அல்லாஹ்வின் சாதாரண படைப்பினங்கள் கூட மாரி காலத்துக்குத் தேவையானவற்றைக் கோடை காலத்தில் சேமித்து வைக்கின்றன.

''ஏழு வருடங்களுக்கு நீடிக்க இருக்கும் பெரும் பஞ்சத்திலிருந்து தப்ப வேண்டுமாயின் முந்திய ஏழு வருடங்களிலும் உற்பத்தி செய்யப்படுபவற்றில் தேவையானவை போக மீதியிருப்பவை சேமிக்கப்பட வேண்டும்'' என யூஸுப் (அலை) அவர்கள் கனவொன்றுக்கு விளக்கமளித்தார்கள்.

''நபி (ஸல்) அவர்கள் தமது மனைவியரில் சிலருக்கு ஒரு வருடத்துக்குத் தேவையானவற்றை சேமிக்க அனுமதி வழங்கியதாக'' இமாம் இப்னு அஸாகிர் குறிப்பிடுகின்றார்.

எமது சொத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றிய பின் மீதமிருப்பின் சேமிக்கலாம். அதற்கு இஸ்லாத்தில் தடையில்லை. அவ்வாறு சேமிக்கப்படும் பணத்தைக் கொண்டு இம்மை மறுமைப் பயன் கருதி நற்பணிகளை ஆற்ற முடியும்.

எமது வாழ்வில்...

எளிமையை கடைப்பிடிப்போம்.

சிக்கனத்தை அடிப்படைப் பண்பாக ஆக்கிக் கொள்வோம்.

வீண்விரயத்தை தவிர்ப்போம்

ஆடம்பரத்தை வெறுப்போம்

எதிர்கால நன்மைகளைக் கருத்திற் கொண்டு சேமிக்க முயற்சி செய்வோம்.

**பயிற்சி:**

1. எளிமையான வாழ்வுக்கு உதாரணமாக இரு சம்பவங்களைத் தேடி எழுதுக.
2. வாழ்வில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும் என்பதற்கு அல்குர்ஆனில் இருந்து ஓர் ஆதாரம் தருக.
3. சமூகத்தில் காணப்படக்கூடிய ஆனால் நாம் தவிர்க்க வேண்டிய ஐந்து வீண்விரயங்களைக் குறிப்பிடுக.
4. சிக்கனமாக வாழ்வதனால் கிடைக்கும் பயன்களுள் மூன்றைக் குறிப்பிடுக.
5. சேமிப்பினால் கிடைக்கும் நன்மைகள் யாவை?